சுருக்கம்

வனம் – 2018–19ஆம் ஆண்டில் வனப்பணியாளர்களுக்கு 15 குடியிருப்பு கட்டடங்களை கட்டுவதற்கு ரூ.217.80 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சுற்றுச் சூழல் – வனத் (வனம்-11) துறை

அரசாணை (நிலை) எண்: 25

நாள்: 27.02.2019
விளம்பி மாசி – 15
திருவள்ளுவர் ஆண்டு 2050
படிக்கப்பட்டன:-

1 அரசாணை (நிலை) எண்.4, சுற்றுச்சூழல் – வனத்(வனம்.11)துறை, நாள். 19.01.2018.
2 அரசாணை (நிலை) எண்.138, சுற்றுச்சூழல் – வனத்(வனம்.11)துறை, நாள். 01.11.2018.
3 முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கடித ந.க.எண். 24833/17/டிஎஸ்1, நாள். 25.05.2018 மற்றும் 15.11.2018.

---

ஆணை :–

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2017–2018ஆம் ஆண்டு வனத்துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் வனப்பணியாளர்களுக்கான குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுதல் தொடர்பாக, கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்:–

"வனக்காப்பாளர் படிநிலையிலிருந்து, மாவட்ட வன அலுவலர் படிநிலையிலுள்ள அலுவலர்கள் வரையிலுள்ள அலுவலர்களுக்கு 2017–2018, 2018–2019, 2019–2020 மற்றும் 2020–2021 ஆகிய ஆண்டுகளில் முறையே ரூ.2 கோடி, ரூ.4 கோடி, ரூ.6 கோடி மற்றும் ரூ.8 கோடி, ஆக மொத்தம் ரூ.20 கோடி செலவில் வனப்பணியாளர் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டப்படும்".

2. இவ்வறிவிப்பினை தொடர்ந்து, மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2017–2018ஆம் ஆண்டில் 16 வனப்பணியாளர்கள் குடியிருப்பு கட்டடங்களை கட்டுவதற்கு இரண்டு கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் அனுமதித்தும், 8 குடியிருப்பு கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.103.62 இலட்சம் நிதி ஒப்புதல் வழங்கியும், ஆணை வெளியிடப்பட்டது. 2017–18ஆம் ஆண்டில் நிருவாக ஒப்புதல் பெறப்பட்ட மீதமுள்ள 8 குடியிருப்பு கட்டடங்களைக் கட்டத் தேவையான நிதி ரூ.96.38 இலட்சம், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், 2018–19–ஆம் நிதியாண்டில் வனப் பணியாளர்களுக்கு 15 குடியிருப்பு கட்டடங்கள் கட்ட

ரூ.217.80 இலட்சம் செலவாகும் எனவும், அதன் விவரங்களை பின்வருமாறு தெரிவித்தும் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்:–

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | குடியிருப்பு கட்டடத்தின் பெயர் | பரப்பு (M2) | தொகை (ரூ. இலட்சத்தில்) | 2018–19 (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | எண்ணிக்கை | தொகை |
| 1. | திருச்சி | புதுக்கோட்டை | வனச்சரக அலுவலர் குடியிருப்பு | 64.80 | 14.20 | 1 | 14.20 |
| | தஞ்சாவூர் | வன உயிரின கோட்டம், நாகப்பட்டினம் | | | | 1 | 14.20 |
| | கூட்டுத் தொகை | | | | | 2 | 28.40 |
| 2. | வேலூர் | திருவண்ணாமலை | வனவர் குடியிருப்பு | 52.14 | 11.43 | 1 | 11.43 |
| | திண்டுக்கல் | கொடைக்கானல் | | | | 1 | 11.43 |
| | தஞ்சாவூர் | வன உயிரினம், நாகப்பட்டினம் | | | | 1 | 11.43 |
| | விருதுநகர் | வன உயிரினம், இராமநாதபுரம் | | | | 1 | 11.43 |
| | கூட்டுத் தொகை | | | | | 4 | 45.72 |
| 3. | வேலூர் | வேலூர் | ஒருங்கிணைந்த வனக் காப்பாளர் மற்றும் வனக் காவலர் குடியிருப்பு | 81.92 | 17.96 | 1 | 17.96 |
| | திண்டுக்கல் | திண்டுக்கல் | | | | 1 | 17.96 |
| | ஆனைமலை புலிகள் காப்பகம், பொள்ளாச்சி | திருப்பூர் | | | | 1 | 17.96 |
| | திருச்சி | பெரம்பலூர் | | | | 1 | 17.96 |
| | மதுரை | மதுரை | | | | 1 | 17.96 |
| | விருதுநகர் | அணில்கள் சரணாலயம், ஸ்ரீ வில்லிபுத்தூர் | | | | 1 | 17.96 |
| | | வன உயிரினம், இராமநாதபுரம் | | | | 1 | 17.96 |
| | கூட்டுத் தொகை | | | | | 7 | 125.72 |
| 4. | விருதுநகர் | வன உயிரினம், இராமநாதபுரம் | வனக் காப்பாளர் குடியிருப்பு | 40.96 | 8.98 | 1 | 8.98 |
| | மதுரை | தேனி | | | | 1 | 8.98 |
| | கூட்டுத் தொகை | | | | | 2 | 17.96 |
| | மொத்த கூட்டுத் தொகை | | | | | 15 | 217.80 |

4. முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. 2018–19ஆம் நிதியாண்டில் 15 குடியிருப்பு கட்டடங்களை கட்டுவதற்கு ரூ.217.80 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு கோடியே பதினேழு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) அரசு நிர்வாக ஒப்புதல் வழங்குகிறது. கட்டடங்களை கட்டுவதற்கு தேவையான நிதி 2019–20ஆம் நிதியாண்டில் 'புதிய பணிகள்' (New Instrument of Service) என்ற தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்படும்.

5. இவ்வாணை, நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 62193/ நிதி(கா.ப.பா.வ(ம)மீ.வ)துறை/2018, நாள் 10.01.2019–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஷம்பு கல்லோலிகர்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை–15. (துறை தலைமை)
தலைமை மாநில கணக்காயர், சென்னை–18.
மாநில கணக்காயர், சென்னை–18.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–35.

<u>நகல்:-</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (வனம்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (கா.ப.பா.வ (ம) மீ.வ) துறை, சென்னை–9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

ந. பவானி
27.2.19
பிரிவு அலுவலர்
27/02/2019